# மாணவர் மன்றம், சென்னை

(மயிலை சிவமுத்து நிலையம்)
தொடக்கம் : 1931 – பதிவு பெற்றது : 52 / 1952]
41, இப்ராகிம் தெரு, சென்னை – 600 001
இணையதளம்:www.manavarmandram.in தொலைபேசி : 044–2525 1587

# தமிழ்த் தேர்வுகள் – 2024

பெருந்தகையீர், வணக்கம்.

ஆண்டு தோறும் மன்றத் தமிழ்த் தேர்வுகள் சீரிய முறையில் நடைபெற ஊக்கம் தந்து உதவிய முதல்வர்கள், தலைமை ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள் அனைவருக்கும் நன்றி.

மாணவர்கள் பயன்பெறும் வகையில் 10, 12ஆம் வகுப்பிற்கு மாணவர் மன்ற முன்மாதிரித் தமிழ்த் தேர்வுகள் நடத்தப்படும்.

கொரானா நோய்த்தொற்றின் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தேர்வுகள் நடத்த இயலவில்லை. அதற்குப் பின் கடந்த ஆண்டு மாணவர்கள் மன்றத் தேர்வில் கலந்து கொள்ள ஆவன செய்து உதவியதற்கு நன்றி. இவ்வாண்டும் அதேபோல் மாணவர்கள் கலந்துகொள்ள உதவுமாறு வேண்டுகிறோம்.

## தேர்வுகள் நடைபெறும் நாள்

**பத்தாம் வகுப்பு (S.S.L.C.) / மெட்ரிகுலேசன் (10ஆம் வகுப்பு) சனிக்கிழமை 03.02.2024**
முற்பகல் 10 மணிமுதல் 1.00 மணிவரை

**பன்னிரண்டாம் வகுப்பு (+2) / மெட்ரிகுலேசன் (12ஆம் வகுப்பு) சனிக்கிழமை 03.02.2024**
முற்பகல் 10 மணிமுதல் 1.00 மணிவரை பொதுத்தமிழ் தாள் I

## பாடத்திட்டம்

1. பத்து, பன்னிரண்டு ஆகிய வகுப்புகளுக்கு அரசுப் பொதுத் தேர்வுக்குரிய தமிழ்ப் பாட நூல்களே மன்றத் தமிழ்த் தேர்வுகளுக்கும் பாட நூல்களாகும்.
2. அரசுப் பொதுத்தேர்வுக்குரிய தமிழ் வினாத்தாள்களை ஒட்டியே மன்ற வினாத்தாள்களும் அமையும்.

## பரிசுகள்

பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு மன்றத் தமிழ்த் தேர்வுகளில் **மாநில அளவில் முதல் மதிப்பெண் பெறும் பள்ளிக்குக் கேடயம்** மன்ற ஆண்டு விழாவில் வழங்கப்பெறும். இவை தவிர ஒவ்வொரு பள்ளியிலும் பத்து, பன்னிரண்டாம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்குத் தமிழ் நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

### பத்தாம் வகுப்புத் தமிழ்த் தேர்வுக்குரிய பரிசுகள்

முதற்பரிசு ரூ. 700/– இரண்டாம் பரிசு ரூ. 500/– மூன்றாம் பரிசு ரூ. 300/–

### பன்னிரண்டாம் வகுப்புத் தமிழ்த் தேர்வுக்குரிய பரிசுகள்

முதற்பரிசு ரூ. 1000/– இரண்டாம் பரிசு ரூ. 800/– மூன்றாம் பரிசு ரூ 500/–

தேர்வுகளில் நூற்றுக்கு 60உம் அதற்கு மேலும் மதிப்பெண் பெறுபவர்க்கு முதல் வகுப்பு நன்மதிப்பிதழும், 50முதல் 59வரை மதிப்பெண் பெறுபவர்க்கு இரண்டாம் வகுப்பு நன்மதிப்பிதழும், 35முதல் 49வரை மதிப்பெண் பெறுபவர்க்கு மூன்றாம் வகுப்பு நன்மதிப்பிதழும் வழங்கப்பெறும்.

### தேர்வுக்கட்டணம்

| | |
|---|---|
| பத்தாம் வகுப்பு (S.S.L.C.) மெட்ரிக் பத்தாம் வகுப்பு | ரூ. 25.00 |
| பன்னிரண்டாம் வகுப்பு / மெட்ரிக் பன்னிரண்டாம் வகுப்பு | ரூ. 30.00 |

தேர்வுக் கட்டணமும் விண்ணப்பமும் அனுப்ப வேண்டிய இறுதி நாள் **13.01.2024** சனிக்கிழமை

## தேர்வுச் செலவு

தேர்வுக் கட்டணத் தொகையில் 20% விழுக்காடு தேர்வுச் செலவுக்கெனப் பிடித்துக் கொண்டு எஞ்சிய தொகையை அனுப்புதல் வேண்டும். மன்றத் தேர்வு மேற்பார்வையாளர் அன்பளிப்பு, விடைத்தாள்களைத் தேர்வாளர்கட்கு அனுப்பி வைக்கும் பார்சல் செலவு, தேர்வு சமயத்தில் உதவும் பணியாளர் அன்பளிப்பு ஆகிய செலவுகள் யாவும் தேர்வுச் செலவில் அடங்கும்.

தேர்வு எழுதுவதற்குரிய விடைத்தாள், தேர்வுக் கட்டணம் முதலியவற்றை அனுப்புதல் போன்ற செலவுகளுக்கு மாணவர்களிடமே பணம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## விடைத்தாள் திருத்த அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| பத்தாம் வகுப்பு | ஒரு தாளுக்கு | ரூ. 4.00 |
| பன்னிரண்டாம் வகுப்பு | ,, | ரூ. 5.00 |

## தேர்வு நிகழும் இடம்

10, 12ஆம் வகுப்புத் தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்கள், தனித்தனியே ஒவ்வொரு வகுப்பிலும் முப்பது மாணவர்களுக்குக் குறையாமல் இருந்தால் விண்ணப்பம் அனுப்ப வேண்டும் அவர்கள் பயிலும் பள்ளியையே தேர்விடமாக வைத்துக் கொள்ளவேண்டும். முப்பதிற்குக் குறைவாக மாணவர்கள் உள்ள பள்ளியினர் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டா.

## தேர்வுக் கட்டணம், விண்ணப்பம் அனுப்பும் முறை

குறிப்பிட்ட காலம் கடவாமல் விண்ணப்பங்களையும், தேர்வுக் கட்டணத் தொகையையும் அனுப்பித் தேர்வுப் பணி சிறக்க ஒத்துழைக்க வேண்டும்.

தேர்வுக் கட்டணத்தைக் காசோலையாகவோ (Cheque) கேட்போலையாகவோ (Demand Draft) அல்லது பணவிடையாகயாகவோ (M.O.) அனுப்ப வேண்டும். கேட்போலையில் Manavar Mandram, Chennai - 1 என்று குறிப்பிட்டு, விண்ணப்பத்துடன் இணைத்து ஒரே உறையில் மாணவர் மன்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

பணவிடையாகவோ, காசாலையாகவோ, கேட்போலையாகவோ அனுப்பி வைக்கும்போது, பள்ளி முகவரியையும் எந்த வகுப்பில், எத்தனை மாணவர்கட்குரிய கட்டணம் என்பதையும் தவறாமல் குறித்து ஒரு கடிதம் இணைத்து அனுப்புக. விண்ணப்பத்தையும், கட்டணத்தையும் நேரிலும் தரலாம்.

தேர்வு நாளினை மாற்றம் செய்ய இயலாது. முழுக்கட்டணத்துடன் வரும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். எக்காரணத்தை முன்னிட்டும் தேர்வுக் கட்டணத்தைத் திருப்பி அனுப்ப இயலாது.

## இன்றியமையாத குறிப்புகள்

1. விண்ணப்பங்கள் அனுப்பிய பின்னர் குறிப்பிட்ட மாணவர்கட்குப் பதிலாக வேறு மாணவர்களை மாற்றிக் கொள்வதோ, தேர்வின்போது புதிய மாணவர்களைச் சேர்ப்பதோ கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டாது.
2. அந்தந்த வகுப்புத் தேர்வுகட்குரிய விண்ணப்பப் படிவங்களில் மாணவர்கள் பெயர்களைப் பதிவு செய்ய வேண்டும். மாற்றி எழுதுதல் கூடாது.
3. ஒவ்வொரு வகுப்பிலும் கலந்துகொண்ட மாணவர்களின் எண்ணிக்கை, அனுப்பிய தொகை ஆகியவற்றை விண்ணப்பப் படிவத்திலுள்ள கட்டத்தில் குறிக்க வேண்டும்.
4. திருத்தம் செய்வதற்குரிய விடைத்தாள்களைத் தங்களுக்கு அனுப்புவதற்கு வேண்டிய முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும். கூரியர் / அஞ்சல் நிலையம் ஆகிய இவற்றுள் தங்கள் பள்ளிக்கு அண்மையில் உள்ளதைக் குறிப்பிடவும்.
5. தேர்வு முடிந்தவுடன் விடைத்தாள்களை மன்றம் அறிவிக்கும் தேர்வாளர் முகவரிக்கு கூரியர் / அஞ்சல் வழி அனுப்ப வேண்டும். மன்ற முகவரிக்கு அனுப்பவேண்டாம். விடைத்தாள் கட்டினை அனுப்பிய விவரத்தினை மட்டும் மன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும்.
6. தங்களுக்குத் திருத்தம் செய்ய வேறு பள்ளியிலிருந்து வரும் விடைத்தாள்களைத் திருத்தம் செய்தபிறகு, மதிப்பெண் பட்டியலையும், பணம் பெறுவதற்கான பற்றுச் சீட்டினையும் நிறைவு செய்து மன்றத்திற்கு விரைந்து அனுப்புக. திருத்தம் செய்த விடைத்தாள்களை மன்றத்திற்கு அனுப்ப வேண்டாம்.
7. திருத்தம் செய்த விடைத்தாள்களைத் தாங்களே பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். மன்றம் கேட்கும்போது பதிவில்லாத பார்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.
8. தேர்வு முடிவுகள் அரசுத் தேர்வு தொடங்குவதற்கு முன்பு அறிவிக்கப்பெறும். நன்மதிப்பிதழ்களும், நூல் பரிசுகளும் தொடர்ந்து அனுப்பப்பெறும். மாநிலப் பரிசுகள் கோடை விடுமுறை கழித்து அனுப்பி வைக்கப்பெறும்.

ப. கி. பொன்னுசாமி
தலைவர்

வே. பக்தவச்சலம்
பொருளாளர்

பொன். இளங்கோவன்
சீனி. சோமசுந்தரம்
இணைச்செயலாளர்கள்

அ. தங்கவேலன்
வி. சீ. கமலக்கண்ணன்
செயலாளர்கள்

புலவர் வெ. மணிவாசகம்
தேர்வு பொறுப்பாளர்
98400 61514

# மாணவர் மன்றம், சென்னை

41, இப்ராகிம் தெரு, சென்னை – 600 001

இணையதளம் : www.manavarmandram.in

## பத்தாம் வகுப்பு

## தமிழ்த்தேர்வு – 2024
### விண்ணப்பம்

| | |
|---|---|
| மொத்த மாணவர்கள் :............. | |
| தேர்வுக் கட்டணம் ரூபா. | |
| தேர்வுச் செலவு 20% ரூபா. | |
| (–) | |
| அனுப்பிய மொத்த தொகை ரூபா. | |

பள்ளியின் பெயர் ..........................................................................................................................

முகவரி ..........................................................................................................................

..........................................................................................................................மாவட்டம் :

அஞ்சல் குறியீட்டு எண்......................................... பள்ளித் தொலைபேசி எண்.........................................

அருகில் உள்ள கூரியர் – அஞ்சல் நிலையத்தின் பெயர் ..........................................................................

விடைத்தாள் திருத்துவதற்கு விருப்பமுள்ள தமிழாசிரியர் பெயர் மட்டும் எழுதுக.

| எண் | தமிழாசிரியர் பெயர் (வீட்டு முகவரியுடன்) தொலைபேசி எண் | விடைத்தாள் கட்டினை எதன்மூலம் அனுப்ப வேண்டும் குறிப்பிடுக. கூரியர், பதிவில்லா பார்சல் |
|---|---|---|
| | **இவ்விடத்தைத் தவறாமல் நிறைவு செய்க.** | |
| 1. | | |
| 2. | | |

கட்டணத் தொகை அனுப்பிய விவரம் : தொகை – ரூ. ..............

நேரில் / காசோலை / கேட்போலை (D.D) / பணவிடை M.O எண்................................... நாள்.........................

வங்கிப்பெயர் ........................................................................ கிளை ..................................

தமிழாசிரியர் கையொப்பம் (பள்ளி முத்திரை) தலைமையாசிரியர் கையொப்பம்

# X - மாணவர் பெயர்ப் பட்டியல்

| எண் | தமிழில் மாணவர் பெயர் | எண் | தமிழில் மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 1 | | 21 | |
| 2 | | 22 | |
| 3 | | 23 | |
| 4 | | 24 | |
| 5 | | 25 | |
| 6 | | 26 | |
| 7 | | 27 | |
| 8 | | 28 | |
| 9 | | 29 | |
| 10 | | 30 | |
| 11 | | 31 | |
| 12 | | 32 | |
| 13 | | 33 | |
| 14 | | 34 | |
| 15 | | 35 | |
| 16 | | 36 | |
| 17 | | 37 | |
| 18 | | 38 | |
| 19 | | 39 | |
| 20 | | 40 | |

மேலும் விண்ணப்பம் வேண்டுவோர் இதுபோன்று ஒளி நகல் (ஜெராக்ஸ்) எடுத்துக் கொள்க. - திருப்புக

# X – மாணவர் பெயர்ப் பட்டியல்

| எண் | தமிழில் மாணவர் பெயர் | எண் | தமிழில் மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 41 | | 61 | |
| 42 | | 62 | |
| 43 | | 63 | |
| 44 | | 64 | |
| 45 | | 65 | |
| 46 | | 66 | |
| 47 | | 67 | |
| 48 | | 68 | |
| 49 | | 69 | |
| 50 | | 70 | |
| 51 | | 71 | |
| 52 | | 72 | |
| 53 | | 73 | |
| 54 | | 74 | |
| 55 | | 75 | |
| 56 | | 76 | |
| 57 | | 77 | |
| 58 | | 78 | |
| 59 | | 79 | |
| 60 | | 80 | |

மேலும் விண்ணப்பம் வேண்டுவோர் இதுபோன்று ஒளி நகல் (ஜெராக்ஸ்) எடுத்துக் கொள்க. – திருப்புக